ஆண்டு சந்தா ரூ. 7. தனிப் பிரதி அணா 2. சிலோன் 15 சதம் REGD. NO. 4642

திராவிடநாடு

மலர் 11. 22—3—53 இதழ் 38

எரிமலையில் வரிக்குண்டு வீசாதீர்!

"வரி கொடோம்!"

"ஏன்? பணமில்லையா, கட்ட..."

"ஏராளமாக இருக்கிறது. எனினும், வரி கொடோம்!"

"என்ன காரணம்?"

"இந்தச் சர்க்காரின் போக்கு எங்களுக்குப் பிடிக்கவில்லை. எங்களுக்குப் பிடிக்காத சர்க்காருக்கு, ஏன் வரி தரவேண்டும்?"

சர்க்காரின் போக்குப் பிடிக்கவில்லை!

எங்கள் பணத்தை, ஏன், தரவேண்டும்?

என்றுகூறி வரிகட்ட மறுத்துவிட்டனர், பன்னிரண்டு பேர்.

"தோழர்காள்! சிந்தியுங்கள்—சிக்கல் வளருகிறது. தீமைப் படுகுழிக்கு, நம்மை இந்தச் சர்க்கார் அழைத்துச் செல்லுகிறது. இந்தப் பாதையில் சென்றால், ஆபத்து! ஆபத்து!! நாம் வரி கட்டுகிறோம்—சர்க்காருக்கு. அந்தப் பணத்தைக், கரியாக்குகிறது அரசாங்கம். ஆயுதத் தளவாடங்கள் வேண்டுமாம், அதிகமாக! போர்க் கருவிகள் புதிதாகக் கண்டு பிடிக்க வேண்டுமாம்! புதுப் புதுப் படைகள் தயாரிக்கப்படுவதாம்! அதற்காக, நம் வரிப் பணம் செலவிடப்படுவதாம்! நமது வரிப் பணம், இதற்கோ, செலவிடப் படுவது? இதனால் நமக்கும் நாட்டுக்கும் கிடைக்கக்கூடிய பலன் யாது? ராணுவம்! ஆடம்பரம்! அட்டகாசம்!—இதற்கு, நாம், வரி செலுத்த வேண்டுமாம். தகாது, இது. கூடாது இப்போக்கு. கொடாதீர் வரி! வரி, கட்டாதீர்!!"

என்று, நாட்டு மக்களையும் அறைகூவி, அழைத்திருக்கின்றனர்.

"எம்மோடு ஒத்துழையுங்கள்! இந்தச் சர்க்காருக்குப் புத்தி புகட்டுவோம்!"—என்று, அழைப்பு விடுத்திருக்கின்றனர்.

இவ்விதம் மறுத்த பன்னிருவரும், வரிகட்ட முடியாதவர்களல்ல—வாடிய முகமும், ஒட்டிய வயிறும், உலர்ந்த கண்களும் படைத்த, ஏழைகள் அல்ல. இன்பத்தில் திளைப்பவர்கள்; ஐசுவரியம் கூத்தாடும் அமெரிக்காவின் ஒரு பகுதியில் இருப்பவர்கள்!!

அவர்கள் மறுக்கிறார்கள் — பிலடெல்பியாவில் இருக்கும் பன்னிரெண்டு பணக்காரர்கள், மறுக்கிறார்கள்.

தமக்கு விதிக்கப்பட்ட வருமான வரியினைக் கட்ட முடியாதென், வெளியிட்டிருக்கிறார்கள்.

"வரிகொடோம்!"—இந்த முழக்கம், அவர்கள் இதயத்திலிருந்து, எழும்புவதற்குள்ள காரணம், வரி வாங்கும் சர்க்கார், அதனை வீணான வகைகளில் விரயம் செய்கிறதென்பதாகும்.

அழகிகளின் கைலாகு, மதுக் கிண்ணம், மந்தகாசமான வாழ்வு பெற்றிருக்கும், அங்கே, இந்த ஒலி.

அரசாங்கத்தின் போக்கைக் கண்டித்து, 'வரிகொடோம்' எனும் முழக்கம்.

ஏழ்மை! பட்டினி! 'இதோ சாவு' எனும் கூச்சல்! கத்தாழை—பிண்ணாக்கு—புல்லரிசி!—இவ்விதம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும், நாமோ, கசக்கிப்பிழியப்படுகிறோம், வரிமேல் வரிகட்டும்படியாக. வாடிய மலர்மீது, தீச்சட்டியைக் கொட்டுவதுபோல், வரிகளை வீசிக்கொண்டிருக்கிறது, 'நம்ம' சர்க்கார்! ஆனால், நாமோ, ஒரு முறை குமுறிவிட்டு, தாலியை விற்றோ — குழந்தையின் காலில் கிடக்கும் வெள்ளிக்காப்பை விலையாக்கியோ, வரிப்பணத்தைக் கட்டிக் கொண்டேயிருக்கிறோம்!!

நன்மைகள் இல்லை! தொல்லைகள் ஏராளம்!! — எனினும், 'நம்மசர்க்கார்' நமக்குப் புதுப்புது வரிகளை வாரி வழங்கிக் கொண்டேயிருக்கிறது.

நாட்டின் முன்னேற்றத் திட்டங்களை அமுல் நடத்தவும், செலவு வகைகளைச்சரிக்கட்டவும்பணமில்லையென்று பாடி, ஆச்சாரியார் அரசாங்கம் புதுவரிகளைப் போடப் போவதாக, அறிவித்திருக்கிறது.

அதில் முக்கியமான — எல்லோரையும் பாதிகககக்கூடியது — புகையிலைக்கு விதிக்க இருக்கும் வரியாகும்.

புயலால் வாடுகிறோம், நாம்! அதனைத் தீர்க்க வழியில்லாத அரசாங்கம், புகையிலைக்கு வரிபோடுகிறது!!

வண்டியோட்டும் கந்தன், ஏர் பிடிக்கும் காத்தான், கூடைமுடையும் சிங்கி, ஆலையில் உழைப்போன் எல்லோர் மூலமும் 'புகையிலைவரி' இனி வசூலிக்கப்படுமாம்—அறிவிக்கிறது, ஆச்சாரியார் சர்க்கார்.

உயிரை ஒரு கையால் பிடித்துக் கொண்டு, மற்றோர் கையால் சர்க்காருக்கு வரிகளைச் செலுத்த வழி வகைகளைத் தேடியபடி, வாடிக் கொண்டிருக்கிறது, நமது பூமி.

வதைகிறார்கள், நம்மவர்! ஒரு வேளை சோற்றுக்கும் வழியில்லாததால், அக்கரைச் சீமைகளுக்குச் சென்றாவது அரைவயிறு வளர்ப்போம் என்று மலேயாக் காடுகளை நோக்கி கப்பலேறிக்கொண்டிருக்கிறார்கள்!! அதுவும், கூட்டம் கூட்டமாக, அவசர அவசரமாக ஓடிக் கொண்டிருக்கிறார்களாம் — தெளிவாகத் தெரிவிக்கிறார் டில்லி அமைச்சர்.

"தெற்கிலிருந்து மலேயாவுக்குச் செல்வோர் தொகை அதிகரித்திருக்கிறது. காரணம், தெற்கில் சிலபாகங்களில் பரவியிருக்கும் பஞ்சம்காரணமாகயிருக்கலாம்" என்று A. K. சந்தா (வெளிநாட்டுத் துணைமந்திரி) டில்லி பார்லிமெண்டில், தெரிவித்திருக்கிறார்.

'டில்லி'யின் கண்ணுக்கு எதுவும் சாதாரணமாக எட்டுவதில்லை! அத்தகைய 'டில்லி'யே இதைவெளியிடுமளவுக்கு நம்மனோர் ஓடுகிறார்கள்—மலேயாக் காடுகளையும், இலங்கைக்குத் திருட்டுத்தனமாகச் செல்லும் சப்பல்களையும், நம்பியவண்ணம்.

இந்த அளவுக்கு ஏழ்மை! பிறந்த நாட்டினை விட்டு, ஓடவேண்டிய நிர்க்கதி!!—ஆனால், இது அனைத்தையும் பரிபாலிக்க வேண்டிய அரசாங்கமோ, இவைகளைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், புதுவரி போடப் போவதாக அறிவிக்கிறது.

ஆச்சாரியாரோ, "கஷ்டங்கள் ஓரளவு தீர்ந்து விட்டன — பருவமழை பெய்தால் போதும். பாலும் தேனும் வழிந்தோட ஆரம்பித்து விடும். பகவானைப் பஜியுங்கள்!" என்று, உபதேசம் புரிந்துவிட்டு, மந்திரிச் சம்பளத்தையும், கவர்னர் ஜனரல் 'பென்ஷனையும்' வாங்கிக் கொண்டு, காலம் தள்ளுகிறார். அவருடைய கூற்றுக்குத் தக்கபடி, பத்திரிகைகளும் தாளம் தட்டுகின்றன! "தீர்ந்தது தொல்லை — மலர்ந்தது இன்பம்" என்று அழகுபடத் தீட்டிக் காட்டுகின்றன. யாராவது, இதைப்பற்றி எடுத்துக்கூற ஆரம்பித்தாலோ, 'அவர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள்,' எனும் ஏச்சாலும் பேச்சாலும் வாயடைக்கப்பட்டு விடுகிறார்கள்.

ஆனால், நாட்டில் நிலவும் கோர நிலைமையை, 'எதிர்க்கட்சிக்காரன்' எனும் ஏளனத்துக்கு ஆட்படாத பாகனேரிசாமிநாதன் எனும் காங்கிரஸ் எம். எல். ஏ., சட்டசபையில் விளக்கியிருக்கிறார்.

"நாட்டில் அமைதி தவழ்வதாக முதல் மந்திரி கூறிவருகிறார். அமைதி, எங்கே தவழ்கிறது? சுடுகாட்டில் தான்! நாடே, சுடுகாடாகிக் கொண்டு வருகிறது! மக்கள் 'புல்லரிசி' தேடி, சாப்பிடுகிறார்கள். பலர், சொந்த ஊரினை விட்டு, ஓடிக் கொண்டேயிருக்கிறார்கள். இவர்களுக்கு, வாழவழிவகைகள் செய்யாத சர்க்கார், எரிமலையில் உட்கார்ந்திருப்பது போன்றதாகும்!" என்று, ஆத்திரம்—வேதனை இரண்டும் இடிக்க, அலறியிருக்கிறார்—சட்ட சபையில். ஆனால், முதலமைச்சரோ, பத்துலட்சம் ரூபாய் போதாதென்று மேலும் 81 ஆயிரம் ரூபாய்களை, கவர்னர் சம்பளத்துக்கென ஒதுக்குகிறார்! அவ்விதம் ஒதுக்கும் அவரே, நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களைக் கவனிக்கப் பணமில்லாததால் புதுவரி போடுகிறேன்—என்கிறார்.

பணமில்லையாம்! 'நம்ம' சர்க்காரிடம் பணமில்லையாம்!!

"பஞ்ச நிவாரண வேலைகளுக்காக பத்துக்கோடி செலவிட்டார்களாம்—டில்லி 2 கோடி மட்டுமேதந்ததாம்"—எனவே, பணமில்லையாம்! ஆகவே, புது வரியாம்!!

இந்த விஷயத்தை விளக்கி, காங்கிரஸ் அரசுக்கு காவலன்போலவும்—கட்டியக்காரனாகவும் விளங்கும் 'அடையாறு சீமான்' முத்தையா, சட்டசபையில் பேசுகிறார், "மத்யதி சர்க்காரிடமிருந்து 8-கோடி ரூபாய் வாங்கும்படி. சென்னை சர்க்காரின் கைகளை, எல்லா எம். எல். ஏக்களும் பலப்படுத்தவேண்டும்!" என்பதாக. அவ்விதம் பலப்படுத்தி டில்லியிடம் கொண்டுபோய் சென்னை சர்க்காரை 'கோதா'வுக்கு விட்டுக்கொண்டு வரவேண்டுமாம் எட்டு கோடியினைப்பெற! எடுத்துச் சொல்கிறார், இப்போது, காங்கிரசைக் கண்ணாடியாகப் பெற்றிருக்கும் கனவான்!!

'மத்திய சர்க்கார் மனமிரங்க வேண்டும்' என்று பல்லவியை, மாகாண முதலமைச்சராக வரும் ஒவ்வொருவரும் பாடாமலிருப்பதில்லை. அதனை அன்பர் ஆச்சாரியாரும் அவரது சீடரும், இப்போது, அடிக்கடி பாடுகிறார்கள். 'அவர்களை நிழல்'போலத் தொடர்வதே இப்பேதைய அரசியல், என்றிருக்கும் செட்டிநாட்டு முத்தையாவும், அவர்களைப்போலவே, பாடுகிறார். டில்லியிடம்போய், எப்படியாவது

(அடுத்த பக்கம் பார்க்க)

"மன்றம் அச்சகம்" துவக்கம்

அன்புடையீர்!

வணக்கம். அச்சடிக்கும் வேலைகள் செய்யவும், நூல்—இதழ் வெளியிடவும் இயலும் வண்ணம் "மன்றம் அச்சகம்" என்ற பெயரில், அச்சகம் ஒன்று, 26,நைனியப்பன் தெரு,மண்ணடி, சென்னை—1 முகவரியில் நிறுவியுள்ளேன் என்பதைக் களிப்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். அச்சகம் நிறுவுவதற்குப் பேருதவியாக இருந்த அண்ணா அவர்களுக்கும், நண்பர்களுக்கும், கழகத் தோழர்களுக்கும் என் உளம்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அச்சகம் வாழவும், வளரவும் அன்பர்களின் இடையீடில்லாத நல்ல ஒத்துழைப்புத் தேவை என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

"மன்றம்" இதழைத் திங்கள் இருமுறை வெளியீடாக மே திங்களிலிருந்து வெளிக் கொண்டு வரவும் எண்ணியுள்ளேன்.

என்றும் நன்றி மறவா அன்பன்,
இரா. நெடுஞ்செழியன்.

திராவிடநாடு

காஞ்சி] 22—3—53 [ஞாயிறு

நமது யோசனை

★

"இலட்சம் ரூபாய் செலவாகிறது!"—என்று தெரிவித்திருக்கிறார், கல்வி அமைச்சர், சென்னை மேல் சபையில்.

சர்க்கார் நடத்தும் 'சென்னைச் செய்தி' என்கிற ஏட்டினை, ஆங்கிலம், தெலுங்கு,தமிழ், மலையாளம், கன்னடம் இந்தி முதலிய மொழிகளில் அச்சடிப்பதற்கு ஒரு இலட்சம் ரூபாய் செலவழிகிறதாம்.

ஆறு மொழிகளில்!—மொத்தம் எவ்வளவு பிரதிகள் செலவாகின்றன தெரியுமா? தமிழில் 3275; ஆங்கிலம் 2725; தெலுங்கு 2200; கன்னடம் 1100; மலையாளம் 725; இந்தி 375. இவ்வளவுதான் விற்பனையாகிறது, ஒவ்வொரு மாதமும்! இதற்கு, ஒரு இலட்ச ரூபாய்!!

பணம் போனாலும், இதனால் ஏற்படும் பலனாவது ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தால், எதுவும், கிடையாது. மக்கள் கைக்கே இவை எட்டுவது கிடையாது. ஏதாவது ஒரு பிரதியைக் கண்டாலும், அவைகளில் அமைச்சர்களின் நடவடிக்கைப் பட்டியலைத்தான் காண முடிகிறதே தவிர உருப்படியான பலனெதுவும் இல்லை.

ஆகவே, வீண் ஆடம்பரத்துக்காக நடத்தப்படும் இந்த இதழ்களை நிறுத்தி, பணத்தை மீதப் படுத்தும்படி சென்னை அரசியலாருக்கு யோசனை கூறுகிறோம். இத்தனை கோடி மக்கள் வாழும் மாகாணத்தில், சர்க்காரின் சார்பில் நடத்தப்படும், இந்த இதழால் மக்களின்வரிப்பணம் விரயமாகிக் கொண்டிருக்கிற தென்பதைக் கேட்டால் பிறர் நகைப்பர்—ஆகவே, இந்த வீண் முயற்சியில் 'திறமைசாலிகளின்' காலத்தையும், 'கஜானாவின்' பணத்தையும் விரயமாக்க வேண்டாம்.

மற்றோர் மறைவு

★

"மாவீரனே, மறைந்துவிட்டீரே, அமைவிட்டு! தலைவனாக இருந்து, இருளில் ஒளிபோலிருந்தீர்—இன்று, போய்விட்டீர். நீர் காட்டிய பாதையில் செல்லும் நாங்கள் கலங்குகிறோம்! கண்ணீர் வடிக்கிறோம்!! எனினும், உமக்கு நாங்கள் காட்டும் மரியாதை, நீர் எதற்காக இத்தனை நாட்களும் பாடுபட்டீரோ அந்தக் காரியத்தை வெற்றிகரமாகச்செய்து காட்டுவதுதான். உமது சமாதியின் முன்னே இந்தச் சபதம் எடுத்துக் கொள்கிறேன்! ரஷ்யாவைப்போல செக்கோஸ்லேவியாவும் செழிக்கப் பாடுபடுவேன்!"

இவ்விதம், மாஸ்கோவில்மாவீரன் சமாதி முன்நின்று சபதமெடுத்துக் கொண்டார்.

ஆனால் சபதம்எடுத்துக்கொண்ட சின்னாட்களுக்கெல்லாம், அவரது சமாதி முன்னின்று, அவருடைய தோழர்கள் சபதம் எடுக்கவேண்டிய துயர சம்பவம், நேர்ந்துவிட்டது.

மாவீரன் ஸ்டாலினை, சமாதியில் கண்டார்! அழுதார்!!

செயல் வீரன் கோட்வால்டை, சமாதியில் கண்டனர்! அழுதனர், செக் மக்கள்!!

செஞ்சதுக்கத்தில் சிந்தை குழம்ப நின்றார், ஸ்டாலினின் சமாதியைப் பார்த்த, செக்கோஸ்லோ தலைவர் கோட்வால்ட்.

அவருடைய பிணத்தைக் கண்டு சிந்தை குழம்ப நிற்கின்றனர், செக் நாட்டுத் தலைநகரமாகிய பிரேக்கில்.

உலகத்தலைவனை இழந்த அதிர்ச்சி குறையுமுன், பேரிடிக்கு ஆட்பட்டனர், செக்கோஸ்லோவேகிய மக்கள். அவர்களது சர்க்கார் தலைவர்—கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்-கிளமெண்ட் கோட்வால்டு மார்ச் 14ம் தேதி இரவு, தனது 56வது வயதில், இறந்தார். இரண்டு நாள், உடல் நலமில்லை—சாவு, மூச்சைக் கொய்து சென்றுவிட்டது.

மாஸ்கோ சென்றார்! மீண்டார்!!—மக்களை மீளாத் துயரத்தில் ஆழ்த்தி விட்டுப் போய் விட்டார்.

முன்னேற்றப் பாதையில் பாடுபடும் தலைவர்களைப் போலவே, அவரும் ஒரு சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்து — தச்சனாக வாழ்ந்து—மக்களின் தலைவனாக உயர்ந்தவர்தான்.

அவரால் தான், செக்காட்டில் கம்யூனிசம் தழைத்தது. கம்யூனிச ஆட்சி நிலைத்தது. அத்தகைய மாபெரும் தலைவரை, செக்மக்கள் இழந்து விட்டார்கள். நாம் பொது வாழ்வில் தியாகம் பல ஏற்று, முன்னேற்றப் பாதையின் மாவீரர்களின் உதாரணமாகயிருந்த ஒருதலைவரை, இழந்து விட்டோம். அவரது, தன்னலங்கருதாச் சேவைக்கு நமது மரியாதைகளைக் குவிக்கிறோம். வாழ்க கோட்வால்ட்! வாழ்க அவர் பாடுபட்ட இலட்சியங்கள்!!

'மத்யப் பிரதேசம்' கூறுகிறது!

"இந்திமொழியைப் புகுத்துவதேன்?"

"இமயமுதல் குமரிவரையில் எல்லோரும் கற்றுப் பழகவே!"

"ஏனிந்த ஆசை?"

"இந்தியா ஒரேநாடு — எல்லோரும் இந்தியர். அதற்காகத்தான்"

"உண்டாக்க முடியுமா, இது? காற்றில் கோட்டை கட்டுவதும், 'அதைக் காண்பீர் விரைவில்' எனக் கர்ஜிப்பதும் அழகாமோ?"

"குறும்புக்காரன், நீ—குதர்க்கம் பேசுகிறாய்"

நான் குறும்புக்காரன்—சரி, என்னைப்போலவே, பேசும் காங்கிரஸ் தலைவர்கள்"

"காங்கிரஸ் தலைவர்களாயிருந்தாலென்ன—இந்த விஷயத்தில் எல்லோரும் ஒன்றாகவே 'பாடம்' ஒப்பிக்கிறார்கள்."

*

தென்னாட்டுக்கு வரும் டில்லித் தலைவர்கள் யாவரும், "இந்தி கற்க வேண்டியதன் அவசியம் குறித்து," பேசாமல் திரும்புவதில்லை.

தெற்கிலேதான் இந்தி எதிர்ப்பு இருக்கிறது — காங்கிரஸ்காரர்களும் அதனை ஆதரித்தால்தான் மக்களிடம் உலவமுடியும் ஆகவே அவர்களில் சிலரும் அவ்விதம் பேசுகிறார்கள்—என்கிற கருத்துக்கொண்டிருக்கும் வடநாட்டினர், ஏராளம்.

வாட நாட்டினர் மட்டுமல்ல — இங்குள்ள காங்கிரஸ் வாதிகளும் கூட, அவர்களைப் போலவே, தவறான கருத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதனாலேயே, "தமிழ்! தமிழ்!! என்று சொல். இந்தியின் மீது கோபாவேசங்காட்டு. தாய் மொழிபால் உனக்குள்ள ஆர்வத்தைக் கண்டு மெச்சுவார்கள். சிலம்புச் செல்வத்தைப் பற்றிச் செப்பு — சிந்தை மகிழ்வார்கள்! வள்ளுவர் குறளில் சிலவற்றை வீசு— 'ஆகா' என்பார்கள்! தமிழ் பாலுள்ள ஆசையைக் காட்டிக் கொள். துவேஷ புத்தியுள்ளவர்களை மட்டந்தட்டி விடலாம்"—என்கிற தவறான 'கணக்கை'ப் போட்டுக் கொண்டிருக்கும் தேசீய நண்பர்களும் உண்டு.

தாய் மொழிப்பற்று என்பது, இயற்கையாகவே வளர்வது. போலி ஆர்வத்தாலோ, பிறமொழியினைத் தூற்றுவதாலோ, அதனைகாட்டிக் கொள்வதென்பது, போலி வேஷமாகவே ஆகும்.

இத்தகைய போலிகளையும், வடவர் ஆதிபத்யத்தையும், மத்யப்பிரதேசம் தட்டியெழுப்புகிறது.

'ஏதோ! தாய்மொழியைப்பற்றிப் பேசுகிறார்கள் —மக்களின் ஆர்வத்தை இழுக்கஇந்தியின் மீது சீறுகிறார்கள்!' என்று நம்மைப்பற்றித் தவறான கண்ணோக்கும், அதே வழியைக் கடைப்பிடித்தால் தாமும் பாராட்டுரை பெறலாமெனும் தப்புக் கணக்கும், போட்டுக் கொண்டிருக்கும் 'சிலம்பு நாவினரை' மத்யப் பிரதேசம்—அழைக்கிறது.

*

மத்யப்பிரதேசம்! டில்லியின் கடாட்சம் பெறக் கூடியவாறு, அருகிலிருப்பதாகும். இந்தி மொழியினர், உலவும் மாகாணம். அங்கே, இந்தி எதிர்ப்பு! ஆச்சரியமாயிருக்கும்! மத்யப் பிரதேசத்தில் இந்திக்கு ஆதிக்கம் ஏற்படுவதாக அஞ்சுகிறார்கள்!

சர்க்காரின் மொழியாக இருக்கும் அந்தஸ்து இந்திக்கும் மாராத்திக்கும் உண்டு என்றோர், சட்டம் கொண்டு வருவதென மத்யப்பிரதேச சர்க்கார் யோசனை செய்துள்ளார்கள்.

அதனை எதிர்க்கிறார்கள்—மத்தியப் பிரதேச மக்கள்.

எல்லா அரசியல் கட்சியைச் சார்ந்த தலைவர்களும் — காங்கிரஸ் உள்பட—இந்த யோசனையை எதிர்க்கிறார்கள்.

இவ்விதம், இந்தியையும் மாராட்டிய மொழியையும் சம அந்தஸ்தில் வைத்தால், தமது மராட்டிய மொழிக்குத் தீங்கு வந்து விடுமென அஞ்சுகிறார்கள். ஆகவே, அதனைத் தெரிவித்து, மேற்படி யோசனையைக் கைவிடுமாறு முதலமைச்சர் ரவிசங்கர் சுக்லாவைக் கோரியிருக்கின்றனர்.

*

மத்யப்பிரதேசம் — 'நாம்' இல்லாத இடம். அங்கே, எப்படி வந்தது, இந்த ஆர்வம்? தாய்மொழிக்குத்தர வேண்டிய இடத்தில் இந்திக்குப் பங்கா! —என்று கேட்கக் கூடிய—ஆர்வம் எவ்விதம் வந்தது? இதனைத்தான், நம்மைப் பற்றி, தவறான கருத்துக் கொண்டிருக்கும் வடவரும் பிறரும் உற்று நோக்க வேண்டும்.

தாய் மொழிப்பற்று, என்பது இரத்தத்தோடு கலந்தது — அது சிருஷ்டி செய்ய முடியாதது. அந்த ஆர்வம் இருப்பவனே, தனது மக்களுக்கு, ஏதாவது செய்ய முடியும். அவனே, தாய்க்கு அடுத்த படியாக நாட்டையும் மொழியையும் பேணுவான்.

இந்த ஆர்வம், பிற மொழியின், பால் வைக்கும் பாசத்தால், மங்கி பிறகு மக்கிவிடும். அங்கிலே பெற்ற காங்கிரஸ் நண்பர்கள், பலருண்டு. அதனாற்றான், தவறான பார்வையை வீசுகின்றனர்.

"இந்தி ஒரே மொழி!"

"இந்தியா, ஒரே நாடு!"

இந்த மயக்கம் தெளிந்தால், தாய் மொழியின்பால்,தானே பற்றும் பாசமும் படரும்.

அவர்களுடைய மயக்கத்தை, இந்த மத்ய பிரதேச சம்பவம் தெளிய வைக்கலாம்.

இங்குமட்டுமல்ல, இந்தியைப் எதிர்ப்போர் இருப்பது — தாய் மொழிமீது ஆர்வம்கொண்ட எங்கும் இந்திக்கு எதிர்ப்பு இருக்கிறது.

அவ்விதம், பலப்பல மொழிகளை தாய்மொழிகளாகக்கொண்ட பற்பல இனமக்கள் வாழும் பூமி, இது.

இதனாற்றான், இந்தியை—அருகேயிருப்போரும் சரி, எட்டயிருப்போரும் சரி, ஏற்க முடிவதில்லை.

இதனை, இந்தி மயக்கம் கொண்டோர் அறிந்துவிட்டால், அது பற்றிய அநாவசியமான பிரச்னைகளும் தகராறுகளும் எழும்பாது.

★

(முன் பக்கத் தொடர்ச்சி)

பணம் வாங்கிவரவேண்டுமாம்! அதற்கு எல்லா எம். எல். ஏக்களும், இந்த சர்க்காரின் கைகளைப் பலப்படுத்தவேண்டுமாம்!!

பிலடெல்பியாவில் பன்னிருவரும், தமக்கு நன்மை செய்யாத அரசாங்கத்துக்கு வரி கட்ட முடியாதென மறுத்திருக்கிறார்கள்—அவர்கள், பன்னிருவர்! ஆனால், சென்னை சுமார் ஆறு கோடி மக்களைக் கொண்டது! இந்த ஆறு கோடியின் பிரதிநிதியாக இருக்கும்,இந்தச் சர்க்கார், பன்னிருவரைப் போல, டில்லிக்குத் தெரிவித்தால் என்ன? "டில்லியே! எனது எஜமானே! நீ, எனக்கு உதவாவிடில், உனக்கு ஏன் பணம் அனுப்ப வேண்டும்?"என்று கேட்கலாமே! வருமான வரி மூலமும் மற்ற வரிகள் மூலமும், 'டில்லி' சுரண்டிச் செல்வது, எத்தனை கோடி ரூபாய்!!

மிரட்டிக் கேட்கலாம் — செட்டி நாட்டாரும் சவால் விடலாம் டில்லியைப் பார்த்து—தன்னுடைய சகாக்களைச் சேர்த்துக்கொண்டு, "டில்லி சர்க்காரே! நீ, எங்களுக்கு வேண்டிய நிதி உதவியைத் தராவிட்டால், என் போன்ற சீமான்கள் உனக்குச் செலுத்தும் வருமான வரியைக் கொடோம்!" என்று, எச்சரிக்கலாம்.

இவ்விதம் செய்வதை விட்டுவிட்டு, சட்டசபையில் ஓலமிடுவதும், 'பணமில்லை' யென்று பல்லிளிப்பதும், பலன் தரக்கூடியதா?

கேட்கவேண்டியவர்களைக் கேட்காமல், மக்களை நோக்கி 'கொடு—வரி' என்று துப்பாக்கி தூக்கி கிளம்புவது?

எத்தனை நாட்களுக்குச் செல்ல முடியும் இந்தத் தர்பார்.

ஏழை — ஒடிந்து கிடக்கிறான். அவனுக்கு மென்மேலும் வரிக் குண்டுகளை வீசுவது நல்லதல்ல.

இந்தமுறை நீடிக்குமாயின், ஏற்கனவே அவதிப்பட்டுக் கிடக்கும் அவனது இதயம், பிலடெல்பியாவில் பன்னிருவர் கேட்டதுபோல, "எங்களை வாழவைக்காத சர்க்காருக்கு எதற்காக வரி செலுத்த வேண்டும்?" என்று கேட்காமல் போகாது — இதை ஆச்சாரியார் சர்க்காருக்கு எச்சரிக்க விரும்புகிறோம்.

அங்கே பன்னிருவர்! இங்கோ அவ்விதம் அறிக்கை விடுக்க-அமுல் நடத்த—கோடிக்கணக்கனக் கான மக்களிருக்கிறார்கள்!!

கவர்னருக்கும், மந்திரிகளுக்கும் 'கொட்டிக் கொடுப்பதும்,' ஏழை மக்களைப்பார்த்து 'எடு வரி' என்று மிரட்டுவதும், எந்த அரசையும் ஒழித்துவிடும்.

'எரிமலையில் இருக்கிறது இந்த சர்க்கார்! ஆம்! எரிமலை, எந்த நேரமும் வெடிக்கலாம்!!

மகிழ்ந்தோம்

நமது நண்பர் மு. கருணாநிதி அவர்களின் துணைவியார் தயாளு அம்மையார், அண்மையில் ஆண்மகவொன்றைப் பெற்றெடுத்தார்கள். செல்வனுக்கு, ஸ்டாலின் என் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

ஐயகோ சமஸ்கிருதமே இதுவா உன்நிலை!

[அடிகள்]

கண்ணன் காட்டிய வழி செல்பவர், கண்ணன் காட்டிய வழி நடவுங்கள் என்று நாட்டவர்க்குக் கூறுபவர், கண்ணனையே இழிவுபடுத்துகிறார் என்று நான் சொன்னால் நம்ப மாட்டார்கள். வேண்டுமென்றே இட்டுக் கட்டிச்சொல்கிறான்-'வழக்கமான துவேஷப்' பிரசாரம் செய்கிறான் என்றேதான் கூறுவார்கள்—நம்மை அறியாதவர்கள், புரியாதவர்கள்.

"கண்ணன்காலம் வேறு, இக்காலம் வேறு — கண்ணன் எழுதியதும், சொன்னதும் இக்காலத்துக்கு ஏற்காது. கண்ணன் காலத்தில், அவர் சொன்னதைக் கேட்டார்கள், அதன்படி நடந்தார்கள். இக்காலத்தில் அது முடியாது. இது நல்லமருந்து சாப்பிடு என்று மருத்துவர் கூறினால் முதலில் நீ சாப்பிட்டுக் காட்டு என்று நோயாளி கூறும் காலம் இது. இந்தக் காலத்தில் அறிவு அந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறது."

என்று 'கண்ணன் காட்டியவழி' எழுதிய அன்பர் ஆச்சாரியார் 17—3—53ல் பெரும்புதூர் சமஸ்கிருதக் கல்லூரி வெள்ளிவிழாவில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்.

கண்ணனுக்கு உயர்வு கற்பிப்பதாகக் கருதிப் பேசிய ஆச்சாரியார், அவரையும் அறியாமலே கண்ணனை இழிவுபடுத்திவிட்டார் — அதாவது உண்மையை ஒளிவு மறைவின்றிக் கூறிவிட்டார். கண்ணன் காட்டிய வழி செல்வது இக்காலத்துக்கு ஏற்றதல்லவென்பதை எடுத்துக்கூறிவிட்டார். அக்காலத்தவர்கள் கண்ணன் சொன்னதையும் எழுதியதையும் கேட்டார்கள் — அதன்படி நடந்தார்கள். ஆனால் இக்காலம் அப்படிப்பட்டதல்லவென்பதை அன்பர் ஆச்சாரியார் ஒப்புக்கொண்டது காண நமக்கு (பகுத்தறிவாளர்களுக்கு) மகிழ்ச்சி உண்டாகாமல் இருக்கமுடியாது. கண்ணனுடைய காலம், அறிவுமங்கி முன்னேற்றமடையாமல் இருந்த காலம் என்று கண்ணனைக் கட்டிக் காப்பவரே கூறுகிறார் என்றால்,யார்தான் மகிழ்ச்சி அடையாமல்இருக்க முடியும்!

அண்ணன் தம்பிமார்களுக்கிடையே சண்டையைக் கிளப்பிவிட்டு, ஒருவரையொருவர் கொன்றொழிக்கும் கொடுமையைச் செய்வித்த கண்ணனின் வழியை இக்காலத்தில் எவரும் பின்பற்றக்கூடாது என்று நாம் கூறினால், நம்மை நாத்திகர் என்று கூறும் 'நல்லறிவாளர்கள்' ஆச்சாரியார் கூறுவதற்கு என்ன சமாதானம் கூறுவரோ நாம் அறியோம். "கண்ணன்போல் எதையோ சொல்லி எழுதிவைத்தால் இக்காலத்தில் கேட்கமாட்டார்கள் — அதன்படி நடக்கமாட்டார்கள்" என்று ஆச்சாரியார் வெட்டவெளிச்சமாகக் கூறியிருப்பதைக்கூடவா மறைத்து விடமுடியும்? யார் எதைக் கூறினாலும், அது நல்லதா? அதில் உண்மை இருக்கிறதா? என்று ஆராய்ந்துபார்க்கும் பண்பைப் பன்னூற்றுண்டுகளாகவே கொண்டுள்ளவர்கள், "சொன்னதைக்கேள்— எழுதியதை நம்பு" என்னும் காட்டுமிராண்டித்தனத்தை எப்படி ஏற்றுக்கொள்வார்கள்?

"அறிவை வளர்க்கும் குறளை விட்டு, அறிவை அடகு வைக்கும் கீதையைப் படியாதே" என்று நாம் பலகாலமாகக் கூறிவரும் ஒரு உண்மையை அன்பர் ஆச்சாரியார் இப்போது கூறியுள்ளார். கண்ணன் கட்டிக் கூறிய கீதை கவைக்குதவாதென்று கூறிவிட்டார். ஏதோ ஒரு காலத்தில் போர்க்களத்தில் நின்று கொண்டு கூறிய சில தந்திரங்கள், நாட்டில் நிலை பெற்று நின்று பயன் அளிக்கக் கூடியன அல்ல என்பதை அன்பர் ஆச்சாரியார் அறுதியிட்டுக்கூறிவிட்டார். இரத்தினச்சுருக்கமாகக் கூற வேண்டுமானால், கீதை பயனற்ற நூல் என்பதைச் சொல்லாமல் சொல்லி விட்டார் என்றே கூற வேண்டும். இந்த அளவோடு அவர் நின்றுவிட வில்லை. மேலும் பல உண்மைகளை—நாம் பல காலமாகவே கூறிவரும் மறுக்கமுடியாத பல உண்மைகளை ஆச்சாரியார் இப்போது "அவர்கள்" முன்னிலையிலேயே மிகமிகத் துணிச்சலோடு கூறிவிட்டார்.

சமஸ்கிருதம் உயிரற்றதாகி விட்டது—இறந்து பட்டது — பேச்சு வழக்கற்று விட்டது என்று நாம் மட்டுமல்ல—நம்முடைய காலத்தில் மட்டுமல்ல — உலகிலுள்ள மொழி ஆராய்ச்சி வல்லுனர் பலரும் மிக மிக முற்பட்ட காலத்திலிருந்தே கூறியுள்ளனர். சமஸ்கிருதம் படிப்பதற்கே மிகவும் கடினமான மொழி. ஒரு சொல்லை உச்சரிக்க வேண்டுமானால், அதனை அடிவயிற்றிலிருந்து எழுப்பிக் கொண்டு வந்து நாவில் நிறுத்தி உச்சரிக்க வேண்டும். அப்படி உச்சரித்தாலும் அதில் இனிமை காண முடியாது. உரத்தும் கனைத்தும் உச்சரித்தாலன்றி ஒரு சொல்லை உருவாக்க முடியாது. நாவை உலரச் செய்யும் ஒரு 'நல்ல' மொழி சமஸ்கிருதம். இப்படிப்பட்ட ஒரு மொழியைப் படிப்பதால், படிப்பவருக்கோ அன்றிப் பிறருக்கோ எந்த விதமான நன்மையும் ஏற்படாது. பிச்சை எடுத்துத் தின்றுவிட்டுப் புறந்திண்ணை தேடிப் படுத்துறங்குபவரன்றி மற்றவர்கள் சமஸ்கிருதம் கற்பது காலக்கழிவேயன்றி வேறொன்று மில்லை. என்ற இன்ன பிற உண்மைகளை நாம் பல காலமாகவே கூறி வந்திருக்கிறோம். அவற்றை எல்லாம் உண்மையென்று உணரும் வாய்ப்பை இப்போது தான் ஆச்சாரியார், உண்டாக்கியிருக்கிறார். சமஸ்கிருதப் பிரியர்கள் அதன் உண்மை வடிவத்தை ஆச்சாரியார் வாயிலாக அறிந்து விட்டார்கள்.

சமஸ்கிருதம் படிக்க முடியாத மொழி.

சமஸ்கிருதம் செத்த மொழி.
சமஸ்கிருதம் கனைப்பு மொழி.
சமஸ்கிருதம் பயனற்ற மொழி.
சமஸ்கிருதம் வாழ்வழி வகுக்க முடியாத மொழி.

சமஸ்கிருதம் பேச முடியாத மொழி.

என்ற சொற்றொடர்கள் நாம் இட்டுக்கட்டிக் கூறுபவையல்ல. அன்பர் ஆச்சாரியாரின் திருவாயால்—சொல்லக்கூடாத இடத்தில்—கேட்டால் காதைப் பொத்திக்கொள்ள வேண்டியவர்கள் முன்னிலையில்—மிகமிகத் துணிச்சலோடு கூறியவையாகும். சமஸ்கிருதத்தை உயர்வாகவும் மேன்மையாகவும் கூறுவதாகக் கருதித் தம்முடைய கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார் ஆச்சாரியார். ஆனால், அவைஅனைத்தும் அவரை அறியாமலே சமஸ்கிருதத்தின் உண்மை வடிவத்தைப்படம் பிடித்துக் காட்டுவது போல் முடிந்து விட்டது.

"சமஸ்கிருதம் கற்பதற்குக் கடினமான மொழி" என்று கூறிய ஆச்சாரியார் அதற்கு வேண்டிய ஆதாரங்களையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

"சமஸ்கிருதத்தின் ஒரு சிறு சொற்றொடரை இலக்கண இலக்கியப் பிழையின்றிப் பேசுவதற்குக் குறைந்தது பத்து ஆண்டுக் காலம் கற்கவேண்டும்"

என்ற ஆதாரத்தைக்காட்டிப் பேசியுள்ளார். ஒரு வாக்கியத்தை அதாவது இரண்டு மூன்று சொற்கள் கொண்ட ஒரு சொற்றொடரைப் பிழையில்லாமல் பேசுவதற்கே பத்து ஆண்டுகள் தேவை என்றால், அதனை இரண்டொரு நிமிடங்கள் சேர்ந்தாற் போல் பேசுவதற்கு எத்தனை ஆண்டுகள் கற்கவேண்டுமோ யார் கண்டார்கள்!

சமஸ்கிருதம் பேசமுடியாத மொழி (Dead Language) என்பதை அந்தச் சமஸ்கிருதக் கல்லூரி வெள்ளி விழாவில் பேசிய நண்பர் அண்ணங்கராச்சாரியாரே மெய்பித்துக் காட்டிவிட்டார். அந்தக் கல்லூரியின் முன்னாள் தலைவர் (Principal) ஒருவரின் படத்தைத் திறந்து வைத்த "பிரதிவாதி பயங்கரம்" அவர்கள் சிறிது நேரம் சமஸ்கிருதத்தில் பேசிவிட்டுப் பின்னர் தமிழிலேயே பேசினாராம்.

ஒரு சமஸ்கிருதக் கல்லூரியில் —அதன் வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தில் சமஸ்கிருத விற்பன்னர் என்று பாராட்டப் பெற்றவர்— சமஸ்கிருதமே எங்கள் தாய் மொழி என்று பெருமைப்படுபவர்கள் முன்னிலையில்—ஏன் தமிழில் பேசினார்? ஏன் சமஸ்கிருதத்தில் பேசவில்லை? சமஸ்கிருதத்தின் உயர்வை எடுத்துக் காட்டுவதற்காகக் கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில் சமஸ்கிருதத்தில் பேசாமல் ஏன் தமிழ் மொழியை இரவல் வாங்கவேண்டும்? தமிழ்தான் "அவர்கள்" அகராதியின்படி சூத்திர மொழியாயிற்றே!"தெய்வமொழி"யாகியசமஸ்கிருதத்தின் சிறப்பைக் கூற வந்தவர் ஏன் அந்த மொழியில் பேசாமல் தமிழில் பேசினார்? ஒரு வேளை அங்கிருந்தவர்கள் பலருக்குச் சமஸ்கிருதம் புரியாது என்ற காரணத்தால் தமிழில் பேசினார் என்று கூறுவது அவ்வளவு நன்றாகவும் பொருத்தமாகவும் இல்லையே!

தர்ப்பைப் புல்லால் சுட்டாலும் கூடச் சமஸ்கிருதத்தைநாவால்உச்சரிக்க முடியாதவர்களே பெருவாரியாக அந்தக்கூட்டத்தில் இருந்தார்கள்—எனவே தமிழில்தான் பேச வேண்டியதாயிற்றுஎன்றுவைத்துக் கொண்டாலும் அது கொஞ்சங்கூட நன்றாக இல்லையே! உண்மையாகவே சமஸ்கிருதம் தங்குதடையின்றிப் பேசக்கூடிய ஒரு மொழி என்றால், சமஸ்கிருதத்தில் பேசாமல் தமிழில் பேசவேண்டிய நெருக்கடி ஏற்பட்டிருக்காதே! 'பயங்கரம்' சமஸ்கிருதத்தில் பேசியதைக் 'கொந்தளிப்பு' தமிழில் மொழி பெயர்த்துக் கூறிற்று என்றல்லவோ செய்தி வந்திருக்கவேண்டும். சமஸ்கிருதக் கல்லூரித்தலைவரின் படத்தைத் திறந்து வைத்த சமஸ்கிருத விற்பன்னர் சமஸ்கிருதத்தையே இழிவுபடுத்தும் முறையில் பேசியது பெரிதும் இரங்கக்கூடிய ஒரு நிகழ்ச்சியாகும்.

சமஸ்கிருதத்தின் உயர்வை மேலும் விளக்கிக் கூறவந்த ஆச்சாரியார் அதனை எவ்வளவு இழிவுபடுத்திக் கூறியிருக்கிறார் பாருங்கள்!

"சமஸ்கிருதம் நடமாடும் உயிருள்ளதாக இல்லை"

என்று கூறியிருக்கிறார்.

சமஸ்கிருதம் நடமாடும் தன்மையை இழந்து விட்டது—செத்து விட்டது—அதாவது பேசமுடியாத மொழியாகி விட்டது என்று கூறியுள்ளார். ஆனால் இக்கூற்றுக்கள் எல்லாம் சமஸ்கிருதத்துக்கு உயர்வு தருவன என்பதே அன்பர் ஆச்சாரியாரின் எண்ணம், அதனாலே தான் அவர் மேலும் அதற்கு விளக்கம் கூற முன் வந்து தடுமாறித் தட்டுக்கெட்டு நிற்கும் நிலையை அடைந்து விட்டார்.

"சமஸ்கிருதம்உயிரற்றமொழி. அது அமிர்தம்போன்றது—அமிர்தத்துக்கும் உயிரில்லை. சமஸ்கிருதத்திற்கும் உயிர் கிடையாது"

என்றுகூறுகிறார். இமயமலை, கங்கை, காவிரி ஆகியவற்றை இதற்கு மேற்கோளாக எடுத்துக் காட்டிச், சமஸ்கிருதத்தின் உயிரற்ற தன்மையை விளக்கியுள்ளார்.

ஆச்சாரியார் அவர்களின் நினைப்பு, உயிரற்ற பொருள்கள் எல்லாம் என்றும் அழியாமல் இருப்பவை என்பதாகும். உயிரற்றவை அழியாதவை தான் என்பதைவாதத்துக்கு வேண்டுமானால் நாமும் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் எது உயிரற்றது, எது உயிரோடுகூடியது என்பதையன்றோ இங்கு ஆராய்ந்து பார்க்க வேண்டியிருக்கிறது.

ஆச்சாரியாரின் கூற்றுப்படி, இமயமும், கங்கையும், காவிரியும் உயிரற்ற பொருள்களாகின்றன. ஆனால், கங்கை, காவிரி, முதலிய நதிகளை 'ஜீவநதி' கள் அதாவது உயிருள்ள நதிகள் என்று ஆச்சாரியாரின் அன்புக்கு உரித்தான புராண இதிகாசங்களேகூறுகின்றன. எனவே, உயிர்த்தன்மை என்பதற்கு ஆச்சாரியார் கொள்ளும் பொருள் என்னவென்பது தெரியவில்லை. சமஸ்கிருதத்தை

நடமாடும் உயிருள்ளதாக இல்லை......

என்று கூறி, அதற்குமேற்கோளாக, இமயமலையையும், கங்கையையும், காவிரியையும்எடுத்துக்காட்டி சமஸ்கிருதத்தின் நடமாட்டமற்றதன்மை இவைக்கும் உண்டென்கிறார். ஆனால் கங்கையும், காவிரியும் எப்போதுமே நடமாடிக் கொண்டுள்ளன. ஒரு வேளை இமயமலை நடமாட்டமற்றதாக இருக்கிறதோ என்னவோ! ஆனால் மலை, கல் முதலான பொருள்களுக்கும் ஒருவித வளர்ச்சி உண்டென்று அசைபொருள் அசையாப்பொருள் ஆராய்ச்சி வல்லுனர் கூறுகின்றனர். காவிரியும் கங்கையும் நாளுக்கு நாள் அளவில் பெரிதாகிக் கொண்டு வருவதை நாம் கண் கூடாகக் காண்கிறோம். எனவே அவற்றை இயற்கையாகவே நடமாட்டமற்றுப்போன சமஸ்கிருதத்தோடு ஒப்பிட்டுப் பேசுவது சிறிதும் அறிவுடைமையாகாது.

"அவயவங்கள் (உறுப்புக்கள்) இருந்தால் சாவு நிச்சயம்—சமஸ்கிருதத்திற்கு அவயவங்கள்கிடையாது — எனவே அது இறப்பற்றது"

என்றும் மேலும் விளக்கம் கூறுகிறார். மக்களுக்குக், கை, கால் முதலான உறுப்புக்கள் (அவயவங்கள்) இருப்பது போல மொழிகளுக்கும் அவயவங்கள் உண்டு. இந்த உண்மை அன்பர் ஆச்சாரியார் அவர்களுக்குத் தெரியுமோ என்னவோ நாம் அறியோம். ஆனால் மொழிகளுக்கும் அவயவங்கள் உண்டென்பது என்னவோ மறுக்க முடியாத உண்மையாகும். மக்களைப் போல் — விலங்குகளைப் போல் மொழிகளுக்கும் அவயவங்கள் இருக்கின்றன என்றால், அவை எவை? மக்களுக்குக் கை, கால்கள் இருந்து அவர்களை நடமாடச் செய்வது போல் மொழிகளுக்கும் கைகால்கள் உண்டு; அவை

அவற்றை நடமாடச் செய்கின்றன. எந்த மொழிக்குக் கை, கால்கள் இல்லையோ, அது நடமாட்டமற்ற மொழியாகி விடுகிறது. அதாவது செத்த மொழியாகிவிடுகிறது. அந்த இனத்தைச் சேர்ந்ததுதான் சமஸ்கிருதம். அதனுடைய கை, கால்கள், அதனை காப்பாற்றுவாரற்ற நிலையில்அழிந்தொழிந்துபோயின. சமஸ்கிருதத்தைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் பலரும் வேறு பல மொழிகளைத் தங்கள் மொழியாகக் கொண்ட காரணத்தால், சமஸ்கிருதம் தன் கை, கால்களைத் தானாகவே இழக்கவேண்டியதாகிவிட்டது. கடைசியில் அதுதன் நடமாடுந் தன்மையை இழந்துவிட்டது. தமிழைப் போல், ஆங்கிலத்தைப்போல் இன்னும் வேறு பல மொழிகளைப் போல் சமஸ்கிருதத்திற்கும் கை, கால்கள் இருந்தால், அது இன்றுஇந்த நடமாட்டமற்ற தன்மையை அடைந்திருக்காது. மற்ற மொழிகளைப் போல் உயிருள்ள மொழியாக — நாட்டில் உலவும் மொழியாக இருக்கும். கால மாறுதலாலோ அன்றிக் கண்காணிப்பற்ற தன்மையாலோ அதன் கை, கால்கள் இல்லாதொழிந்து போயின. அதனால், அது மூலையில் குந்த வேண்டியதாயிற்று.

தமிழ்மொழிக்கு அடுத்தபடியாகத் தொன்மையில் முன்னணியில் நிற்கும் மொழிகளில் சமஸ்கிருதமும் ஒன்று என்று மொழிநூல் வல்லுனர் எல்லாரும் கூறினர். அத்துணைச் சிறப்பு வாய்ந்த சமஸ்கிருதம் இன்று நடமாட்டமற்றுக் கிடக்கிறதென்றால், எவருக்கும் வருத்தமும் அதனிடத்து ஒரு தனிப்பாசமும் ஏற்படத்தான் செய்யும். நன்றாக வாழ்ந்த ஒருவன் அவனுடைய நடவடிக்கைகளினால் கெட்டுக் கீழ்நிலையை அடைந்துவிட்டாலும், 'ஐயோ நல்லபடி வாழ்ந்தான் —ஏதோ கெட்டுவிட்டான்' என்று அவன்மீது இரக்கம் காட்டிப் பேசுவார்களே தவிர, அவனை ஏசி ஏளனம் செய்யமாட்டார்கள். அதுபோலத்தான், நாமும், கை கால்களை இழந்து நிற்கும் சமஸ்கிருதத்தைக் கண்டு இரக்கப்படுகிறோம். ஏன் இப்படி ஒரு மொழிதன் உண்மையான வடிவத்தை இழந்து நிற்க வேண்டுமென்ற நல்லெண்ணத்துடன்தான் இதனைக் கூறுகிறோம். சிலரைப்போல் ஒன்றை இழித்தும் பழித்தும் கூறும் பண்பு நமக்கு (தமிழ் மக்களுக்கு) எந்தக்காலத்திலுமே கிடையாது. நல்லதை வரவேற்றுக், கெட்டதைக் குறை கூறாமல் இருப்பதுதான் தமிழனுடைய சிறந்த குணமாகும். இதனைநம்மைக் காரணமற்றுக் குறைகூறும் அன்பர்கள் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

சமஸ்கிருதம் தன் அவயவங்களான இலக்கணம், இலக்கியம், உச்சரிப்பு, ஒலி ஆகியவற்றை இழந்துவிட்டது. ஒரு மொழிக்குக் கை கால்கள் போன்றவை, இலக்கண இலக்கியங்களேயாகும். இவை எந்த ஒரு மொழிக்கு இல்லையோ அந்த மொழிதான் நடமாட்ட மற்றமொழியாகிவிடுகிறது—அந்த இனத்தைத்தான் சமஸ்கிருதமும் அடைந்துவிட்டதென்று அன்பர் ஆச்சாரியார் கூறி வருத்தமும் வேதனையும் அடைந்துள்ளார்.

சமஸ்கிருதம் இலக்கண இலக்கிய அமைப்பற்ற மொழியென்பதை வலியுறுத்த முன்வந்த ஆச்சாரியார் அவர்கள் அதற்கு மேற்கோளாகத் தமிழ் மொழியையே (இந்தியாவின் பொது மொழியான இந்தியை அல்ல) எடுத்துக்காட்டுகிறார்.

தமிழ் சுலபமான மொழி. அதைப்படிப்பவர்கள் எவ்வளவு உற்சாகமாக இருக்கிறார்கள். எழுத்து, உச்சரிப்பு, ஒலி, இலக்கணம் இலக்கியம் எல்லாம் தாயார் சொல்லிக் கொடுத்துக் குழந்தைகளுக்கு வந்துவிடுகிறது குழந்தைகளைப்பாருங்கள், "நான் போனேன்" என்று கூறுகிறார்களே தவிர, "நான்போவான்" என்று கூறுவதில்லை............ ஆனால் சமஸ்கிருதம் இப்படி இல்லை. போதுவாகப் பேசப்படும் மொழியல்ல பண்டிதர்கள் சிலர் 25 ஆண்டுகளுக்கொரு முறை இப்படிக் கூட்டம் கூட்டி, அதில் ஒரு சிலர் பேசுகிறார்கள்......... சமஸ்கிருதம் ஒரு கடினமான மொழி. இலக்கண இலக்கியக் கஷ்டத்திற்காகச் சிலர் சிக்கலில் மாட்டிக் கொள்ளாமல் தப்பிப் பேசுவது வழக்கம். 'நான் நேற்றுப் போனேன்' என்று சொல்வதானால் கஷ்டம்—சிக்கல் வரும். அதற்காக, நேற்றுப் போனவன் நான் என்று சிக்கலில்லாமல் சொல்லி விடுவார்கள். சமஸ்கிருதம் படிப்பதும்—பேசுவதும் கடினம்.

என்பது, ஆச்சாரியார் அவர்களின் கருத்தாகும். "சமஸ்கிருதத்தைப் பற்றிச் சில உயர்ந்தகருத்துக்களைப் பேசுவார் — அதற்கு ஆதரவு தருவார் என்று நாம் நினைத்து—முதல் மந்திரியாச்சே — நம்மளவாளாச்சே என்று அழைத்து வந்தால், அவர் நம்மையும் நம்முடைய தெய்வ மொழியையும் இழிவுபடுத்தும் முறையில் தமிழ் மொழிக்கு உயர்வும் சிறப்பும் தரும்முறையிலன்றோ பேசிவிட்டார்" என்று சமஸ்கிருதக் கல்லூரிக் குடையவர்கள் கருதி வருத்தப்படக்கூடிய அந்த அளவுக்குத் தமிழ் மொழியைப் பற்றிப் புகழ்ந்து கூறியிருக்கிறார். அதே சமயத்தில் சமஸ்கிருதத்தின் உண்மை நிலையை எவ்வளவு அப்பட்டமாக—அணுவளவும் எவரும் 'இதுதவறு' என்று குறை கூறாத அளவுக்குப் பேசியுள்ளார்.

தமிழ்மொழி பேசுபவர்கள்—அதாவது குழந்தைப் பருவத்தில் உள்ள சிறுவர்கள் அதனை எவ்வாறு பேசுகின்றனர் என்பதை விளக்க வந்த ஆச்சாரியார் அவர்கள் 'நான் போனேன்' என்று கூறுவார்களே தவிர, 'நான் போவான்' என்று கூற மாட்டார்கள் என்கிறார். 'போனேன்' போவான். இந்த இரண்டு சொற்களையும் ஏன் அவர் பயன்படுத்தினார் என்பது தான் இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகும்.

ஒரு குழந்தை, தமிழ் மொழியில் பேசும்போது, நான் போனேன் என்று தெளிவாகவும் இலக்கணப் பிழையின்றியும் பேசுகிறது. ஆனால் அதே சொற்றொடரைச் சமஸ்கிருதம் படித்த ஒருவர் சமஸ்கிருதத்தில் பேசமுயன்றால், அது, நான் போவான் என்று பேசவருமே யொழிய, நான்போனேன் என்று பேசவராது என்பதை விளக்கவே நண்பர் ஆச்சாரியார் இந்தச் சொற்றொடரை எடுத்துக் கையாண்டிருக்கிறார். இது வெறும் சமாளிப்பல்ல —சமாதானமும் அல்ல — முற்றிலும் உண்மை. எப்படியென்று கேட்கிறீர்களா?

சமஸ்கிருதத்தின் கடினத் தன்மையை எடுத்துக்காட்டவந்த ஆச்சாரியார் அவர்கள், அதற்குள்ள இலக்கண இலக்கியப் பஞ்சத்தை எடுத்துக்காட்டி—அதன் பேசமுடியாத தன்மையை விளக்கி — சமஸ்கிருதம் படித்த பெரிய பண்டிதர்கள்கூட, நான் நேற்றுப் போனேன் என்ற சொற்றொடரை நேற்றுப் போனவன் நான் என்று பேசுவார்களே தவிர தப்பில்லாமல் பேச மாட்டார்கள் என்று தெளிவாகவும் ஐயந்திரிபறவும் விளக்கிக் கூறியுள்ளார்.

மேலும் சமஸ்கிருதத்தின் உண்மைநிலையை விளக்க முன்வந்த ஆச்சாரியார்,

"சமஸ்கிருதம் படிப்பதால் இலாபம் இல்லை. குமஸ்தா வேலை கூடக்கிடைக்காது. என்பது தெரிந்தும் கஷ்டப்பட்டுப் படிக்கிறார்கள். ஆகவே இவர்களை ஏளனம் செய்யக்கூடாது—அவமதிக்கக்கூடாது— மதிக்கவேண்டும்."

என்பதாகப் பெரிதும் இரக்கப்பட்டுக் கூறியிருப்பதைப் படிக்கும் போது, உண்மையிலேயே நமக்கும் பரிதாபமாகத்தான் இருக்கிறது. ஏன் ஒரு மொழியின் நிலை இந்த அளவுக்குச் சீரழிந்துபோகவேண்டுமென்று எண்ணாமல் இருக்கமுடியவில்லை.

மேலும் சமஸ்கிருதத்தின் மதிப்பை விளக்கவந்த அன்பர், அதனை,

வயதான கிழவி.
ஒன்றுக்கும் பிரயோசனமற்றது
வேலை செய்ய முடியாதது.
கை நடுக்க எடுத்துவிட்டது.

என்று கூறுவதன் வாயிலாக அதற்கிருந்த சிறிதளவு சிறப்பையும் குறைத்துவிட்டார். என்றும் இளமை குன்றாதது கன்னித் தமிழ் மொழி ஒன்றுதான் என்பதை நன்கு வலியுறுத்துவதுபோல் இருக்கிறது சமஸ்கிருதத்தைக் கிழவி என்று அன்பர் ஆச்சாரியார் கூறுவது — அதற்காக அவருக்குத் தமிழ் மக்கள் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளார்கள்.

இந்த அளவுக்குத் தமிழ்மொழியைப்பற்றியும், சமஸ்கிருதத்தைப் பற்றியும் உண்மை நிலைகளை உள்ளபடி எடுத்துக்கூறிய ஆச்சாரியார் அவர்கள், தமக்கு இயற்கையாகவே அமைந்துள்ள குறும்புத்தனத்தையும் காட்டிவிட்டார் — ஆனால் உடனே அச்சம் ஏற்பட்டுவிட்டது போலவும் பேசியிருக்கிறார். அதாவது, தமிழ்மொழியில், "குழுமி இருக்கிறீர்கள்" என்று சொன்னால் பலருக்குப்புரியாதென்பது ஆச்சாரியாரின் வாதம். இந்தச்சொற்றொடர் ஒரு வேளை ஆச்சாரியாருக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் புரியாமல் இருக்கலாம். ஆனால் இந்தச் சொற்றொடரை இக்காலத் தமிழ் மக்கள் அனைவருமே நன்றாகப் புரிந்து கொள்ளும் அளவுக்கு தமிழ்மொழியைப்பற்றி அறிந்திருக்கிறார்கள் என்பதை ஆச்சாரியார் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். "குழுமி இருக்கிறீர்கள்" என்பதற்குமாறாகக் "கூடியிருக்கிறீர்கள்" என்ற திருத்தத்தையும் கொண்டுவந்திருக்கிறார்.

குழுமி இருத்தல்
கூடி இருத்தல்

என்ற இரு சொற்றொடர்களுக்கும் உள்ள பொருள் வேறுபாட்டை அன்பிற்குரிய ஆச்சாரியார் உணரவில்லை என்றே தெரிகிறது. 'குழுமி இருக்கிறீர்கள்' என்பதற்கு வரும் பொருள் "கூடியிருக்கிறீர்கள்"என்பதற்கு ஒருபோதும் ஒத்துவராது. "கூடியிருக்கிறீர்கள்" என்றால் பிரிந்தவர்கள் கூடியிருக்கிறார்கள் என்றுதான் பொருள் — கூடுவது, பிரிந்த பின்னர் ஏற்படுவது.

குழுமுவது, எங்கெங்கோ இருப்பவர்கள் எல்லாரும் ஒரிடத்தில் வந்து சேர்ந்திருப்பது என்பதுதான் பொருளாகும். பிரிந்தவர்கள் கூடுவதற்கும், பிரியாதவர்கள் குழுமுவதற்கும் உள்ள வேறுபாட்டை அன்பர் ஆச்சாரியார்போன்றவர்கள் உணராமல் இருக்க முடியாது என்ற போதிலும், ஏதோ தவறிக் கூறியது என்றுதான் கொள்வோமே! ஆனால்,

பச்சைத் தண்ணீர் என்ற சொற்றொடர் ஆச்சாரியார் அவர்களால் பயன்படுத்தப்பட்டது காண வியப்படைகிறோம். குழுமி இருத்தலைக் குறை கூறிக், கூடி இருத்தல் என்ற திருத்தத்தைக் கொண்டு வந்த ஆச்சாரியாரே 'பச்சைத் தண்ணீர்' என்கிறார் என்றால் யார்தான் — ஓரளவுக்குத் தமிழ் தெரிந்தவர்கள் — நகைக்காமல் இருக்கமுடியும்! பச்சைநீர் என்று சொன்னாலாவது ஒருவிதத்தில் பொருத்தமாக இருக்கும். அப்படியில்லாமல், பச்சைத் தண்ணீர் என்று படித்தவர்கள் — அதிலும் ஒரு மேடையில் நின்று பேசும் பொழுது குறிப்பிட்டுப் பேசுவது தமிழ்மொழியை வேண்டுமென்றே இழிவுபடுத்துவதாகும். தண்ணீர் என்றாலே குளிர்ந்த நீர், என்றுதான் பொருள்—தண்—நீர் தண்ணீர். இதற்கு எதிர்ப் பெயர் வெந்நீர். இதனைக் கூடத் தெரிந்துகொள்ளாமல், 'போர்ட்டுப் பலகை, கேட்டுக் கதவு' என்பது போல் பச்சைத் தண்ணீர் என்று பச்சிளங் குழந்தை போல் பேசுவதா? தமிழறிந்தவர் ஆச்சாரியார் என்று, பலரால் பாராட்டப் படுபவரா ஒரு மேடையில் நின்று கொண்டு பச்சைத் தண்ணீரும் சுடுதண்ணீரும் பேசுவது! பாலை 'மில்க்' என்று கூறுவது கூடாது—கண்டிக்கத் தக்கது என்று கூறுமளவுக்குத் தமிழ்ப் பற்றுள்ளவர், பச்சைத் தண்ணீர் என்ற கொச்சைச் சொல்லைக் கூறியிருக்கத் தேவையில்லை.

கடைசியாக அன்பர் ஆச்சாரியார் சமஸ்கிருதப் பித்தர்களுக்கு ஒரு எச்சரிக்கையோடு தமது சொற்பொழிவை முடித்திருக்கிறார் அதாவது,

"சமஸ்கிருதம் படித்தால்தான் ஞானம் வரும் என்பது கிடையாது......நான் ஞானம் அடைந்தேன் என்ற அஞ்ஞானம் ஏற்படக் கூடாது"

என்பது ஆச்சாரியாரின் எச்சரிக்கையாகும். இதனைச் சமஸ்கிருதப் பிரியர்கள் ஏற்றுக்கொள்வார்களோ அல்லது "ஆச்சாரியார் 'நம்மளவா' தான் என்ற போதிலும் இப்படியெல்லாம் பச்சையாகப் பேசியிருக்கப்படாது பாருங்கோ" என்று பக்கத்து வீட்டுஅய்யங்காருடன் பேசுவதோடு நிறுத்தி விடுவார்களோ யாருக்குத் தெரியும்! ஐயகோ சமஸ்கிருதமே இதுவா உன்நிலை என்பதோடுநானும்இக்கட்டுரையைமுடித்துக்கொள்கிறேன்.

★

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 (தபால் செலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.
பிராஞ்ச்: 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.
சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 62. MAIN ST. கொழும்பு-11.

சட்டசபையில் முழக்கம்

★

விக்கிரவாண்டித் தொகுதி எம். எல். ஏ. யான தோழர் ஏ. கோவிந்தசாமி இன்றைய சர்க்காரின் போக்கு குறித்து, பேசியதாவது:—

கவர்னர் அவர்களுடைய பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். நேரு அவர்களும், ராஜேந்திர பிரசாத் அவர்களும் இங்கு வந்தது மக்களுக்கு சந்தோஷத்தையும் நம்பிக்கையையும் ஊட்டி இருக்கும் என்று. நேரு அவர்கள் வந்தகாலத்தில், இந்தி எதிர்ப்பு நடத்தியதற்கு அவர் பதில் சொல்லி இருக்கிறார். இந்தி எதிர்ப்பு இயக்கத்தை இவர் ஒரு "Nonsense" என்று குறிப்பிட்டார். நம் நாட்டில் அன்னிய மொழி ஆதிக்கம்செலுத்தக்கூடாது என்று ஆகஸ்டு மாதம் 1-ம் தேதி பெரியார், அண்ணாதுரை அவர்கள் தலைமையில் எங்கு பார்த்தாலும் ரயில்வே நிலையங்களிலுள்ள இந்திப் பெயர்களை அழித்தார்கள். அதைப் பார்த்துத் தான் இவர் "Nonsense" என்று குறிப்பிட்டு இருக்கிறார். அன்று அந்நிய துணி இருக்கக்கூடாது என்று அந்நிய துணியை பகிஷ்காரம் செய்தோம். துணியைக் கொளுத்தினோம். அந்த இயக்கத்தை ஆரம்பித்து நடத்தினோம். அப்பொழுது அந்த இயக்கத்தைஒருவரும்"Nonsense" என்று சொல்லவில்லை. அவ்விதம் சொல்லி இருந்தால் சும்மா விட்டு விட்டிருப்பார்களா? அதன் பிறகு ராஜேந்திர பிரசாத் தமிழ் நாட்டிற்கு வந்தார். இவர் எதைப் பார்க்க வந்தார்? கோயில்களையும் களியாட்டங்களையும்தான். எங்கெல்லாம் கோயில்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் சென்றார். அதையெல்லாம் பார்த்துவிட்டு கடவுள்பக்தி செய்துகொண்டும் எங்கெல்லாம் களியாட்டம் நடந்ததோ அதையெல்லாம் கவனித்தும் வந்தார். ஆனால் எங்கும் பஞ்சம் இருக்கிறது, எங்கும் பட்டினிசாவுதாண்டவம்ஆடுகிறது,நெசவாளர்களிடையே எங்கும் வேலையில்லா திண்டாட்டம் இருக்கிறது, எங்கும் மக்கள்கஷ்டப்படுகிறார்கள். இதைப் பார்க்க இவர் வரவில்லை. இராமேச்வரம் வந்து அவர் தர்ப்பணம் செய்தார். மதுரை வந்து மீனாட்சி அம்மனை தெரிசனம் செய்தார். அம்மனுடைய நகைகளைப் பார்வையிட்டார். சீரங்கம் சென்று தூங்கும் அரங்கநாதரை பார்த்தார். தில்லையில் ஆடுகிற நடராஜரைப் பார்த்தார். பார்த்துத் திருப்தி அடைந்தார். திருப்பதிக்குச் சென்று வெங்கடேஸ்வரரைப் பார்த்து தெரிசனம் செய்தார். உண்டியலில் காணிக்கை செலுத்தினார்! இதைத்தான் நாம் பேபரில் பார்த்தோம்,படித்தோம். நிவாரண வேலை என்ன நடக்கிறது பட்டினியால் எத்தனை பேர்கள் சாகிறார்கள் என்பதைப் பார்க்கவில்லை. இராமேஸ்வரம் போனவர் அதற்கு அடுத்தாற்போல் உள்ள பஞ்ச பிரதேசமான இராமநாதபுரம் ஜில்லாவிற்கு ஏன் போகவில்லை? அதையெல்லாம் பார்த்துவிட்டு நிவாரண வேலையை ஆரம்பிக்கஏன் வழி காணவில்லை. இதையெல்லாம் என்னால் குறிப்பிடாமல் இருக்கமுடியவில்லை. ராஜேந்திர பிரசாத் தமிழ் நாட்டிற்கு வந்தபோது பெரியார், சி. என். அண்ணாதுரை தலைமையில் தி. க; தி. மு. க. தோழர்கள் இவருக்குக் கருப்புக்கொடி காட்டினார்கள். எதற்காக அவ்விதம் கருப்புக்கொடி காட்டினார்கள். தமிழ் நாட்டில் பார்க்க வேண்டியது கோவில்கள் அல்ல, தூங்கும் பெருமானைப் பார்க்கவேண்டியது அவசியம் இல்லை. மக்களின் நிலையை அறிந்து அதற்கு நிவாரணம்தேடிக் கொடுக்க வேண்டியது அவசியம் என்றுதான் இவர்கள் கருப்புக் கொடி காட்டினார்கள்.

ராஜாசர் முத்தையசெட்டியார் அவர்கள் சென்னையில் ஆந்திரத் தலைநகர் வந்தால் இங்குள்ள 200 எம். எல். ஏ-க்களும் ராஜினாமா செய்யவேண்டும் என்று குறிப்பிட்டார். அதை நான் வரவேற்கிறேன். முதலில் இவர் இதைச் செய்வாரா, என்பதுதான் என்னுடைய சந்தேகம். இவர் முதலில் ராஜினாமா செய்து வழி காட்டவேண்டும். இதைத் செய்வாரா என்று தான் நான் கேட்கிறேன்.

தஞ்சை ஜில்லாவில் ஏற்பட்ட புயல் காரணமாக நிவாரணம் அதிகமாகக் கொடுக்கப்பட்டு வருவதாக கவர்னர் பேச்சில் குறிப்பிட்டிருக்கிறது. ஐந்துகோடி ரூபாய் நஷ்டம் அடைந்த இடத்தில் 17-லட்சம் ரூபாய் நிவாரணம் அளித்தால் இது போதுமா? ஒருக்காலும் போதாது. நானும் எதிர்கட்சித்தலைவர் ராமமூர்த்தி, கே. விநாயகம், மணலி கந்தசாமி முதலியவர்களும் திருச்சி தஞ்சை ஜில்லாக்களில் கிராமம் கிராமமாகச் சென்று சுற்றிப் பார்த்தோம். நாங்கள் போவதற்கு முன்பாகவே முதலமைச்சர் அவர்கள் வந்தார். வந்தாரே உங்களுக்கு ஏதாவது நிவாரணம் அளித்தாரா என்று கேட்டோம். அவர்கள் பதில் சொன்னார்கள் ராஜாஜி வந்தார், மகாபாரதக் கதையைப் பற்றி சொன்னார். மகாபாரதக் கதையின் பலாபலன்களை சொன்னார். பீமனுக்கு எவ்வளவு பலம் என்றும் அவனுக்கு ஒரு ஆலமரத்தையே பிடுங்கும் சக்தி இருந்தது என்றும், இவனுடைய தகப்பன் வாயுவுக்கு ஒரு புளிய மரத்தையே பிடுங்கும் சக்தி உண்டு என்றும் சொன்னதாகச் சொன்னார்கள். மகாபாரதக்கதையைக் கூறினால் வீழ்ந்த வாழை மரங்களை வைத்துவிட முடியுமா? இவர்களுக்கு நிவாரணம் அளிப்பதைப்பற்றி கூறாமல் என்ன பலன். மக்களுக்கு நம்பிக்கை வரும்படியாக நடந்துக் கொள்ளவில்லை என்பதைக் கண்டு நான் வருந்துகிறேன். அனேகம் மரங்களுக்கு ரூ. 10ம், 15ம், 25ம் நிவாரணம் அளித்திருக்கிறார்கள். அது போதுமா? ஒரு தலைவனை இழந்த குடும்பத்திற்கு இந்தப்பணம் போதுமா? தலைவனையும் புருஷனையும் இழந்தவர்களுக்கு ரூபா. 50 கொடுத்தால் இது போதுமா என்பதைப் பார்க்க வேண்டும். பல இடங்களில் புயல் நிவாரணத்தின் பெயரால் பல நபர்கள் நிதி திரட்டிக்கொண்டு வருகின்றனர். அந்த முறையில் திராவிட முன்னேற்றக் கழகம் ரூ. 25 ஆயிரம் வரையில் நிதி திரட்டியிருக்கிறது. இதைக்கொண்டு மக்களுக்கு கைத்தறி துணி வாங்கி வழங்கப் போகிறார்கள். ஆனால் வடநாட்டில் இருந்து சினிமா கோஷ்டி வந்து இங்கு கிரிக்கெட் ஆடி புயல் நிவாரணத்தின் பெயரால் நிதி திரட்டி பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் சேர்த்துக்கொண்டு வடநாட்டிற்குப் போய் விட்டார்கள். இதை ஆட்சேபித்து என். எஸ். கிருஷ்ணன் போன்றவர்கள் கிளர்ச்சி செய்தார்கள். அதற்கு போலீஸ் தடை விதித்து விட்டார்கள். நியாயம் கிடைக்கவில்லை என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நான் கூறாமல் இருக்க முடியவில்லை. இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தும் சும்மா இருந்துவிட்டார்கள். அரசாங்கம் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தென்னாற்காடு ஜில்லா துறைமுகப்பட்டினத்தை சீர்திருத்துவதாகச் சொன்னார்கள். ஆனால் இன்னும் எந்த முறையிலும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. கடலூர் துறைமுகத்தைக் குறைந்தது பாண்டிச்சேரி போன்ற துறைமுகத்தைப்போல் சீர்திருத்தினால் எவ்வளவோ நன்மையாக இருக்கும். நெய்வேலியில் நிலக்கரி சுரங்கம் வெட்ட ஆரம்பித்துவிட்டார்கள். ஆகவே இதை விரைவில் சீர்திருத்தினால் எவ்வளவோ நன்மையாக இருக்கும். நெய்வேலியில் நிலக்கரி சுரங்கம் வெட்ட ஆரம்பித்துவிட்டாகள். இதை அதிவிரைவில் சீர்திருத்தினால்தான் இந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு மிகவும் உதவியாக ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கு சௌகர்யமாகும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகப் படுத்துகிறேன்.

நெசவாளர்களின் நிலைமையைச் சீர்படுத்துவதற்காக ஆச்சாரியார் அவர்கள் முயற்சி செய்தார்கள். அதை மக்கள் எல்லோரும் பாராட்டினார்கள். ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து கரைபோட்ட வேஷ்டி புடவைகளை கைத்தறிகளுக்கென்றே ஒதுக்க வேண்டுமென்பதாகவும், 40-ம் நம்பர் ரக நூலை கைத்தறிக்கு ஒதுக்கவேண்டுமென்பதாகவும் மத்திய சர்க்காருக்கு சிபார்சு அனுப்பினார்கள். ஆனால் மத்திய சர்க்கார் இவர்கள் சொன்னது முழுவதையும் ஒப்புக்கொள்ளாமல் 40o/o மாத்திரம் ஒதுக்க ஒப்புக்கொண்டார்கள். அதனால் ராஜாஜி அவர்கள் திருப்தி அடைந்து சும்மா இருக்கக் கூடாது. இதனால் உண்மையான பரிகாரம் கிடைக்காது. ஆகவே நமதுமுழுக்கோரிக்கைகளும் பூர்த்தியாகும் வகையில் உழைப்பது அவசியமாகும். இப்பொழுது எதற்கும் மத்திய சர்க்காரை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதால்தான் அந்தந்தப் பிராந்திய மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய நலன்களைக் காப்பாற்றிக்கொள்ள, தனித் சுதந்திர திராவிடநாடு வேண்டும்—ஆந்திர ராஜ்யமும், கன்னட கேரள ராஜ்யங்களும் பிரிக்கப்பட வேண்டுமென்பதாகக் கூறுகிறோம். அப்பொழுதுதான் தமிழ்மக்களின் பிரச்சினையை தெலுங்கு மக்களின் பிரச்சினைகளை, மலையாள கன்னட மக்களின் பிரச்சினைகளை வெற்றிகரமாகத் தீர்த்துக் கொள்ள வழியும் சந்தர்ப்பமும் ஏற்படும். ஆகவே மொழிவாரியாக மாகாணம் முதலில் பிரிக்கப்பட வேண்டும். ஆந்திரர்களுக்கு தலைநகரம் தற்காலிகமாகக்கூட சென்னையில் இருக்க அனுமதிக்கக் கூடாது என்பதை எல்லோரும் வரவேற்கிறார்கள். ஆந்திர மாகாணத்தை ஏற்படுத்திவிட்டால் மாத்திரம் போதாது. எல்லைத் தகராறுகள் நாளடைவில் எழாதவகையில் எல்லாப் பிரச்சினைகளையும் உடனடியாகத் தீர்த்தாகவேண்டும். திருத்தணி, திருப்பதி போன்றவைகள் எல்லாம் தமிழ்நாட்டுடன் இருக்க வேண்டுமென்பதில் சந்தேகமில்லை.

தென்னாற்காடு ஜில்லாவிற்கு முதன் மந்திரி அவர்கள் விஜயம் செய்திருந்தபொழுது அங்கே அவருக்கு 60-வகைப் பதார்த்தங்களோடு அருஞ்சுவை உண்டி படைந்தார்கள் என்பதாகப் பேப்பர்களில் பார்த்தோம். ஆகவே அந்த 60-வகை பதார்த்தங்களைப் புசித்த கனம் ராஜகோபாலாச்சாரியார் தென்னாற்காடு ஜில்லா பூராவிலும் மக்கள் அறுபது வகை உண்டி புசிப்பதாக எண்ணிவிடக் கூடாது. சோற்றுக்கு வழியின்றி மக்கள் பிண்ணாக்கை தின்கிறார்கள். கத்தாழை இலை, கிழங்கு முதலியவற்றைத் தின்று கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே நாட்டில் பஞ்சம் தாண்டவமாடும் பொழுது கனம் மந்திரி அவர்கள் அதைக் கவனிக்காதது போல இருப்பது சரியல்ல. கவர்னர் அவர்களுடைய பிரசங்கத்தில் இது சம்பந்தமான ஒரு வார்த்தைகூட சொலலப்படாதது ரொம்பவும் வருந்தத்தக்கது.

அவர்களுடைய பிரசங்கத்தை நன்றாகத் துருவித் துருவிப் பார்த்தேன். படித்தேன். அதில் பாராட்டவேண்டிய விஷயம், போற்ற வேண்டிய விஷயம் எதுவுமில்லையென்ற காரணத்திற்காகத்தான் நான் கவர்னருக்கு நன்றிபாராட்டும் தீர்மானத்தை எதிர்க்கின்றேன்.

✲

திருச்சி மாநாடு அறிவிப்புகள்

கடைகள் வைப்போர் கவனிக்க

ஏப்ரல் 4, 5 தேதிகளில் திருச்சி லால்குடியில் நடைபெறும் திராவிட முன்னேற்றக் கழக 2-வது மாநாட்டில், உணவுக் கடைகள் டீ கடைகள், வெற்றிலைப் பாக்குக் கடைகள், புத்தகக் கடைகள் முதலியன வேண்டுவோர் கீழ்க் கண்ட முகவரிக்கு எழுதி விபரம் தெரிந்து கொள்ள வேண்டுகிறேன்.

எம். எஸ். மணி, செயலாளர்.

*

திருச்சி மாவட்ட தி. மு. க. கிளைக்கழகத் தோழர்களுக்கு

ஏப்ரல் 4, 5 தேதிகளில் திருச்சி லால்குடியில் நடைபெறும் தி. மு. க. 2-வது மாநாட்டிற்கு தீர்மானம் அனுப்புவோர் 30-3-53-ம் தேதிக்குள் மாநாட்டு அலுவலகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டுகிறேன்.

ஒவ்வொரு கிளையும் 2-பிரதிநிதிகள் அனுப்பவும்.

எம். எஸ். மணி, செயலாளர்.

*

தொண்டர்களுக்கு அறிவிப்பு

ஏப்ரல் 4, 5 தேதிகளில் திருச்சி லால்குடியில் நடைபெறும் திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக 2-வது மகாநாட்டில் தொண்டர்களாக பணியாற்ற விரும்பும் தோழர்கள் உடனடியாக மாநாட்டு அலுவலகத்தில் தங்களது பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

ஐ. எம். ஷரீப், தொ. ப. தலைவர்.

மன்றம் வெளியீடுகள்

கண்ணீரும் செந்நீரும வளர்த்த கழகம் (இரா. நெ) ரூ, 0—12—0

ராஜாடி ராஜா (இரா. செ) ரூ. 0—12—0

பொது அறிவு (இரா. செ) ரூ. 0—8—0

மறைந்த திராவிடம் (இரா. நெ) ரூ. 0—3—0

மன்றம் பதிப்பகம்,
26, நைனியப்பன் தெரு, மண்ணடி
சென்னை—1.

பாண்டியனார்

(கே. கே. நீலமேகம்)

பட்டிவீரன்பட்டி தோழர் டபிள்யு. பி. அ. சவுந்தரபாண்டியனார் அவர்கள் காலம் சென்றுவிட்டதைப் பற்றி வருந்துகிறேன். அவர்கள் மறைந்த இடம் பூர்த்தி செய்யமுடியாதது. அவர்கள் சமூக சீர்திருத்த சுயமரியாதைக் கொள்கைகளை, நாட்டு மக்களுக்குப் பரப்புவதில் ஓர் வித்தாக விளங்கினர். கள்ளங்கபடமற்ற உள்ளம் படைத்தவர். எடுத்த முயற்சியை முடித்தே தீர்க்கும் இயல்பு கொண்டவர். சுயமரியாதை இயக்கம் பெரியார் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் தோழர் சவுந்தரபாண்டியனார் அவர்களின் ஒப்பற்ற ஒத்துழைப்பினல் தான் தமிழ்நாடு பூராவும் இயக்க வளர்ச்சி செழித்துத் தழைத்து, பூத்து, காய்த்து, பழுத்து, மக்கட்கு பருத்தறிவு பயன் தந்தது என்பது எனது உயரிய எண்ணமாகும். சேரன்; சோழன், பாண்டியன் ஆகிய மூவேந்தர்கள் நாடாண்ட காலத்தில்கூட அந்தந்த மண்டலத்தில், அந்தந்த வேந்தற்கு (மன்னர் குத்தன் தேசமல்லால் சிறப்பில்லை) என்ற ஔவைப்பிராட்டியார் கூற்றுப்படி செல்வாக்கு இருந்ததாக சரித்திரம் கண்டோம். ஆனால் முடிசூடா மன்னனாகிய நம் பாண்டியனார் அவர்கள் மூன்று மண்டலங்களிலும் கொள்கையின்பால் முடிசூடா மன்னராகவே விளங்கினர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியென விளங்குகிறது. திராவிட இயக்கம் வலுப்பெற்றுவரும் நெருக்கடியான இந்தக் காலத்தில் பாண்டியனாரவர்கள் மறைவு ஈடுசெய்யமுடியாத நஷ்டமேயாகும்.

பிரியப்போகும் திராவிட நாட்டில் தமிழ்நாட்டிற்கு தலைவராகும் தகுதியுடைய ஒப்பற்ற மாணிக்கத்தை இழந்துவிட்டோம். அந்தோ! அந்தோ!! நம் திராவிட இயக்கத்திற்கு கடந்த 30 வருடகாலமாக ஈடு இணையற்ற, தேடக்கிடைக்காத தங்கக்கட்டிகளை, நாட்டைச் செவ்வியமுறையில் சீர்திருத்தம் செய்யும் சிற்பிகளான எத்தனையோ அரும்பெரும் பொக்கிஷங்களை இழந்து வந்திருக்கிறோம். தியாகராயர் டி. எம். நாயர், பானகல் அரசர், பன்னீர்செல்வம் முதலிய எத்தனையோ தலைவர்களை நல்ல தருணத்தில் இழந்துவந்திருக்கிறோம். அவர்கள்கூட அரசியல் துறையில்மட்டும் தான் தலைவர்களாகவிளங்கினர்களே தவிர, சமுதாயச் சீர்திருத்தத்துறையில் தலைவர்கள் ஆகமுடியவில்லை. நமது பாண்டியனார் அவர்கள் அரசியல் சமுதாயச்சீர்திருத்தத்துறையிலும் தலைமை தாங்கும் தகுதியுடையவராய்வரும் பக்குவத்தில் "இயற்கை எய்தினர் என்றால், திராவிடனுக்கு ஈடு இணையில்லா நஷ்டம் என்பதைத் தெரிவிக்கவேண்டிய நிலையிலிருக்கிறேன். அவர் உடல் மறைந்தது. ஆனால் அவர் செயலாற்றிவந்த தொண்டு நம்கண் முன் நிற்கிறது, அவர்தம் குடும்பங்களில் அவரது தொண்டை சிரமேற்கொண்டு நமக்கு வழி காட்டியாக வரலாம். வந்தால் அவரைப்போன்று ஆக்கவேலைக்கு ஈடு செய்யலாம். ஆனால் அவர்போன்ற தன்னலமற்ற உண்மை உள்ளம் படைத்தவரை எக்காலம் எந்த நேரத்தில் காண்போம் என்ற ஏக்கம் என் மனதைவிட்டு அகன்ற பாடில்லை. அவர் மறைவு திராவிட இயக்கத்திற்கும்குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், ஈடு செய்யமுடியாத நஷ்டமாகும். இயற்கையினல் ஏற்பட்ட இந்த நஷ்டத்திற்கு நான் வருந்துகிறேன். தமிழ்நாடு மக்களும் வருந்துவார்கள்.

குடும்பத் தலைவர் பிரிவால் வருந்தும் அவர் குடும்பத்தார் ஆறுதல் அடையுமாறுகேட்டுக்கொள்ளுகிறேன்.

தெ. ஆ. மாவட்ட தி. மு. க. செயற்குழு அழைப்பு

தென் ஆற்காடு மாவட்ட செயற்குழுக் கூட்டம் 22–3–53 ஞாயிறு மாலை 3 மணிக்கு நெல்லிக்குப்பம் கழகக் கட்டிடத்தில் நடைபெறும். உறுப்பினர்களனைவரும் வருகை தருமாறு வேண்டுகிறேன்.

ஆர். பாலகுருசாமி,
செயலாளர்.

பாண்டியன் நினைவு நாள்

பம்பாய்: தி. மு. க. சார்பில் 8–3–53 தோழர் நெல்லைச்செழியன் தலைமையில் வ. உ. செல்லையா, எஸ். தியாகராசன், த. மு. பொற்கோ, பேசினர். இரண்டு நிமிடம், அனைவரும் எழுந்துநின்று மரியாதை செய்தனர்.

கடலூர்: O. T. நாடார் வாலிபர் சங்கச் சார்பில் 15–3–53ல் வி. கே. எஸ். வி. சௌந்தரபாண்டியன்தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது.

தூத்துக்குடி: கழகத்தார் 8–3–53 காலை நகரக் கழக அலுவலகத்தி லிருந்து அனுதாப ஊர்வலமாகச் சென்று காலை 10-மணிக்கு பால கிருஷ்ணா டாக்கீசில் கூட்டம் நடத்தி, மரியாதை செய்தனர்.

மேட்டுப்பாளையம்: (நீலகிரி) கழக அலுவலகத்தில் வீ. சண்முகநாதன் தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது.

நரசிங்கபுரம்: (சேலம்) கழகத்தில் அனுதாபத் தீர்மானம்.

போத்தனூர்: (சேலம்) ம. செகநாதன் தலைமையில் கழகத் தோழர்கள் அனுதாபக்கூட்டம் நடத்தினர்.

கொம்பான்குளம்:(நெல்லை)கிராம முன்னேற்றக் கழகத்தின் இலங்கை கிளையில் 8–3–53ல் மு. கா. ராசன் தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது.

வடக்கூர்: (தூத்துக்குடி) கழக உடற்பயிற்சி நிலையத்தில் அய்யாச்சாமி தலைமையில் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

திருப்பூர்: குமரன் நூல் நிலையத்தில் தலைவர் முனுசாமி தலைமையில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

தஞ்சை: கழகச் சார்பில் ஏ. வி. பதி (முனிசிபல் கவுன்சிலர்) இல்லில் கணேசன் தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது.

காஞ்சி: அம்மங்காரத் தெரு சிந்தனையாளர் கழகத்தில் (தி.மு.க.) 2 நிமிட நேரம் எழுந்து நின்று, மரியாதை செய்தனர் — கழகத் தோழர்கள்.

திருத்தணி: கழகச் சார்பில் அனுதாபக் கூட்டம் 8–3–53ல் நடைபெற்றது.

திருவாரூர்: 8–3–53 மாலை தெற்கு வீதி நகரசபை முன்பு இருந்து மௌன ஊர்வலம் புறப்பட்டு விஜயபுரம் சந்தைப்பேட்டையில் முடிவுற்றது. தி. மு. க. சார்பில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் கருப்பசாமி தலைமையில் சமரச பாண்டியன், கே. எம். ஜமால், சே. பே. சதாசிவம், கு. தென்னன், இரா. விசயராகவன், முனிசாமி பேசினர்.

காஞ்சிபுரம்: பிள்ளையார்பாளையம் புதுப்பாளையத் தெரு, திராவிட முன்னேற்றக் கழக கமிட்டி 17–3–53ல் முருகய்யன் தலைமையில் நடைபெற்றது. மாவீரர் சௌந்தரபாண்டியனார் மறைவு குறித்து, அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

புயல் நிவாரண நிதி

ரூ. 26432—13—8

[இதுவரை]

முன் கணக்குப்படி	25733—5—2
தி. மு. கழகம், சித்தூர்	10—0—0
காத்தான்குளம் பொதுக்கூட்டத்தில் ஆசைத்தம்பியிடம் கொடுத்த தொகை	4—8—0
திருநீர்மலை, சுந்தரம்	2—0—0
கவுண்டன்பாளையம், துரை	1—0—0
சேனூர் இராமமூர்த்தி அய்யர்	1—0—0
ஆவல் சூரம்பட்டி தி. மு. க.	2—0—0
விளாப்பாக்கம் தி. மு. க.	10—0—0
திருவல்லிக்கேணியில் 12—2—53 அன்று நடைபெற்ற கட்டணக் கூட்டத்தில் முன்பு கொடுத்த ரூ 400—0—0 போக மீதம்	81—3—6
மதுரை மாவட்டம் சமயநல்லூர் கிராமத்தினர் துரைராஜ் மூலம்	35—0—0
தி. மு. க. பெ. கட்டுக்கொல்லை, சிலோன்	15—0—0
திராவிடர் நூல் நிலையம், தலாவக்கொல்லை, சிலோன்	25—0—0
திருவனந்தபுரம் கிருஷ்ணன்மூலம்	7—12—0
ராஜபாளையம் எட்வின் பிரதாப்தாஸ்	2—0—0
பாகாலா, திராவிட நாடு ஏஜண்ட்	10—13—0
விழுப்புரம் ரெங்கசாமி	1—0—0
வீரப்பா, புட்டாலா, சிலோன் மூலம்	70—0—0
A. அய்யன் சிலோன்	26—0—0
ராணிப்பேட்டை மகாராஜா பீடி தொழிற்சாலை	11—8—0
போளூர் உயர்தரப்பள்ளி மாணவர்கள் ராமச்சந்திரன் மூலம்	1—12—0
உதகை நடராசன்	1—0—0
திருமால்புரம் பஜார் ஜோதி நாயுடு	1—0—0
கோலார் தங்கவயல் (ஆண்டர்சன்பேட்டை) தி.மு.க.	380—0—0
	26432—13—8

மு. கருணாநிதி
புயல் நிதிக்குழு செயலாளர்
தி. மு. க.

நடக்க இருப்பவை

26—3—53 வியாழக்கிழமை மாலை திருவள்ளூர் தர்காமைதானத்தில் நடைபெறும் தி. மு. கழக பொதுக் கூட்டத்தில் தோழர் கி. மனோகரன் சொற்பொழிவாற்றுவார்.

29—3—53 சேலம்—அம்மாப்பேட்டை ஜோதிடாக்கீசில் கே. பி. நஞ்சப்பன் தலைமையில் தி. மு. க. (அம்மாபேட்டை கிளை) 3-வது ஆண்டுவிழா. தோழியர் பூங்கோதை கொடியேற்றுவிப்பார். தோழியர் அருண்மொழி, கி. மனோகரன் பேசுவர். மாலை 6 மணிக்கு 'வி' மார்கெட் மைதானத்தில் ஏ. கே. தம்மண்ணன் எம். சி. தலைமையில் பூங்கோதை, அருண்மொழி, மனோகரன் பேசுவர்.

திருமண அழைப்பு

குடந்தை சுருட்டு வியாபாரியான டி.எஸ். கோவிந்தசாமி அவர்களின் செல்வன் ஜி. ராமநாதன்—செல்வி மணிமேகலை வாழ்க்கை ஒப்பந்தம் 26—3—53 காலை 10 மணிக்கு குடந்தை அழகப்பமுதலித் தெரு 1405 இல்லில் மேல்தஞ்சை ஜில்லா ரிஜிஸ்டிரார் முன்னிலையில் நடைபெறும்.

திருத்தம்

புயல் நிவாரண நிதிச் செய்தி (15—3—53 இதழ்)யில் பீஹார்—சிங்கப்பூர் மோசபோனிமைன்ஸ் தென்னிந்திய சமரச சன்மார்க்க சங்கம் ரூ. 103—0—0 என்று இருப்பதை பீஹார், சிங்பூம் முசா பணிமைன்ஸ்.......என திருத்திக் கொள்க.

*

கடலூர் நல்லதீர்ப்பு நாடகமூலம் புயல் நிதிக்கு வரவு, தலைவர்கள் வரப்போக செலவு நீக்கி ரூ. 1400 தரப்பட்டது எனத்திருத்திக் கொள்க.

பஞ்சாயத்து தேர்தல்

வேலூர்— திருத்தறைப்பூண்டிக் கருகிலுள்ள இவ்வூர் பஞ்சாயத்துத் தலைவராக தோழர் கோ. ராமகிருஷ்ணன் வெற்றி பெற்றார்.

வாலாஜாபாத் — (செங்கற்பட்டு) பஞ்சாயத்து போர்டு தலைவராக தி. மு. க. பிரமுகர் தோழர் தணிகாசலம் வெற்றி பெற்றார். கழகச் செயலாளரும், உறுப்பினராக வெற்றி பெற்றார்.

விஷமங்கலம் — (திருப்பத்தூர் வ. ஆ.) நமது இயக்கத் தோழர் டி. அண்ணாமலை தலைவரானர். இயக்கத்தோழர் விசுவநாதன் உறுப்பினரானர்.

தேவபாண்டலம்—(தெ. ஆ) பஞ்சாயத்து தலைவராக தோழர் ஏ. இராமசாமி அவர்களும் உறுப்பினர்களாக தோழர்கள் எ. கே. ராஜன், அப்துல் ரசாக், டி. பி. கேசவன், எஸ். பழனி, எஸ். இலக்குவன், கே. ராமலிங்கம், எஸ். நாராயணன் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram